### சட்டப்பேரவையில் வைத்த கொள்கை விளக்கக் குறிப்பில்
### பெரியார் – அம்பேத்கர் – நேரு பெயர்களை நீக்கி துணிச்சல்

# சமூக நீதி வரலாற்றையே இருட்டடிப்பு செய்திருக்கிறார் முதல்வர் விஜய்!

## மானம், ரோஷம் இன்றி பஜனை மடமாகிவிட்ட சத்தியமூர்த்திபவன்!
## கழக சட்டத்துறை இணைச் செயலாளர் இ.பரந்தாமன் கடும் தாக்கு!

சென்னை, ஆக.31–

**கொள்கை விளக்க குறிப்பில் பெரியார், அம்பேத்கர், நேரு பெயர்களை நீக்க எங்கிருந்து துணிச்சல் வந்தது? சமூக நீதி வரலாற்றையே இருட்டடிப்பு செய்திருக்கிறார் முதல்வர் விஜய். சமூக நீதியின் வேர்களையே வெட்டத் துணிந்திருக்கிறார்கள். பெரியாரையும் அம்பேத்கரையும் வெறும் பிராண்ட் அம்பாசிடர்களாக மட்டுமே பயன்படுத்துகிறது தவெக. காங்கிரஸுக்கு மானம், ரோஷம், சொரனை இல்லையா? பஜனை மடமாகிவிட்ட சத்தியமூர்த்தி பவனை விஜய்பவன் என மாற்றிக் கொள்ளுங்கள். காங்கிரஸுடன் கூட்டணி வைத்துக் கொண்டே பா.ஜ.க.வின் நிழல் ஆட்சியை நடத்துறது விஜய் அரசு என தி.மு.க. சட்டத்துறை இணைச் செயலாளரும் முன்னாள் சட்டமன்ற உறுப்பினருமான இ.பரந்தாமன் சரமாரியாக குற்றம்சாட்டியுள்ளார்.**

அவரது அறிக்கை வருமாறு:-

தந்தைப் பெரியார், புரட்சியாளர் அம்பேத்கர், ஜவகர்லால் நேரு ஆகியோருக்கு மிகப் பெரிய அவமரியாதை செய்துவிட்டது விஜய் அரசு. பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை மானிய கோரிக்கை கொள்கை விளக்க குறிப்பில் இருந்து பெரியார், அம்பேத்கர், ஜவகர்லால் நேரு ஆகியோரின் பெயர்கள் நீக்கப்பட்டிருக்கின்றன.

ஒட்டுமொத்த சமூக நீதிப் போராளிகளையும் கொதித்தெழச் செய்திருக்கிறது. தமிழ்நாட்டின் இடஒதுக்கீடு மற்றும் சமூக நீதி வரலாற்றுப் பக்கங்களில் இருந்து பெரியார், அம்பேத்கர், ஜவஹர்லால் நேரு ஆகியோரின் பெயர்கள் நீக்கப்பட்டிருப்பதை வன்மையாகக் கண்டிக்கிறோம்.

மானிய கோரிக்கைகளின் போது துறையின் அமைச்சர்களால் சட்டமன்றத்தில் வைக்கப்படும் முக்கிய ஆவணம் கொள்கை விளக்க குறிப்புகள். ஒவ்வொரு துறை மானிய கோரிக்கை விவாதம் தொடங்கும் முன்பு துறை அமைச்சர்கள், ’கொள்கை விளக்க குறிப்பை படித்ததாக அவை நடவடிக்கை குறிப்பில் பதிவு செய்து கொள்ளுங்கள்’ என சொல்லுவார்கள். அதன்படி அவை சட்டமன்ற நடவடிக்கை குறிப்பிலும் பதிவு செய்யப்படும்.

**திட்டமிட்டே பெயர்கள் நீக்கம்!**

சட்டப்பேரவையில் அமைச்சர் சம்பத் குமார் அவர்கள் படித்த பிற்படுத்தப்பட்டோர் மிகப்பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை கொள்கை விளக்கக் குறிப்பில், ’இடஒதுக்கீடு’ என்ற பத்தியில் பெரியார், அம்பேத்கர், ஜவகர்லால் நேரு ஆகியோரின் பெயர்களை திட்டமிட்டே நீக்கியிருக்கிறார்கள். முந்தைய திராவிட மாடல் ஆட்சியில் கொள்கை விளக்க குறிப்பில் இடம்பெற்ற இவர்களின் பெயர்களை நீக்குவதற்கு எங்கிருந்து துணிச்சல் வந்தது? மைனாரிட்டி அரசாக இருந்து கொண்டு, கூட்டணி அரசின் தயவில் ஆட்சியை நடத்திக் கொண்டிருக்கும் போதே இந்த அத்துமீறலை செய்திருக்கிறார்கள்.



திராவிட மாடல் ஆட்சியில் கடந்த ஆண்டு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் சிவ.வீ.மெய்யநாதன் அவர்கள் சட்டமன்றத்தில் தாக்கல் செய்த கொள்கை விளக்கக் குறிப்பில் இடஒதுக்கீடு பற்றி குறிப்பிடும் போது, ’1951இட ஒதுக்கீடு தொடர்பாக வெளியிடப்பட்டிருந்த வகுப்புவாரி பிரதிநிதித்துவ அரசாணை உச்ச நீதிமன்றத்தால் ரத்து செய்யப்பட்டது. இதனை எதிர்த்து பெரியார் தமிழ்நாட்டில் வழி நடத்திய எதிர்ப்பு ஊர்வலங்கள் மற்றும் கண்டனக் கூட்டங்களின் விளைவாக அரசமைப்புச் சட்டத்தில் முதல் திருத்தத்தில் பிரிவு 15(4) சேர்க்கப்பட காரணமாக அமைந்தது. பிரதமர் ஜவஹர்லால் நேரு மற்றும் சட்ட அமைச்சர் அம்பேத்கர் ஆகியோர் முன்னெடுத்து இந்த முதல் அரசமைப்புச் சட்டத் திருத்தத்திற்கு வழி வகுத்தனர்’ என குறிப்பிட்டிருந்தார்.

**திராவிட மாடல் அரசின் திட்டப் பெயர்களும் நீக்கம்!**

இந்த முக்கியமான பகுதியை விஜய் அரசு முற்றிலும் நீக்கிவிட்டது. கடந்த ஆண்டு மட்டுமல்ல, அதற்கு முந்தைய ஆண்டுகளிலும் இந்த பகுதியை கொள்கை விளக்க குறிப்பில் திராவிட மாடல் அரசு குறிப்பிட்டு வந்திருக்கிறது. திராவிட மாடல் ஆட்சியின் திட்டப் பெயர்களை நீக்குவது போல, பெரியார், அம்பேத்கர், ஜவகர்லால் நேரு ஆகியோரின் பெயர்களையும் நீக்கிவிட்டார்கள்.

எங்கள் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் ஆட்சியில் கொள்கை விளக்கக் குறிப்பில் இடம் பெற்றிருந்த பெரியார், அம்பேத்கர், ஜவகர்லால் நேரு மட்டுமல்ல, இடஒதுக்கீட்டு வரலாற்றையும் சுருக்கிவிட்டது விஜய் அரசு. நீதிக்கட்சி குறித்த குறிப்புகள், வகுப்புவாரிய பிரதிநித்துவ அரசாணை, பெரியாரின் போராட்டங்கள், இடஒதுக்கீடு கொள்கை, இடஒதுக்கீடு வரலாறு, மண்டல் கமிஷன், ஒன்றிய அரசுப் பணி மற்றும் கல்வி நிலையங்களில் மாணவர்கள் சேர்க்கையில் இதர பிற்படுத்தப்பட்ட வகுப்பினருக்கு 27 விழுக்காடு இடஒதுக்கீடு பற்றியெல்லாம் தற்போதைய கொள்கை விளக்க குறிப்பு ஆவணத்தில் திட்டமிட்டுத் தவிர்க்கப்பட்டிருப்பது அதிர்ச்சியையும் வேதனையையும் ஏற்படுத்தியிருக்கிறது.

தமிழ்நாட்டின் உயிர் நாடியான சமூக நீதி வரலாற்றையே இருட்டடிப்பு செய்திருக்கிறார் முதல்வர் விஜய். சமூக நீதியின் தொட்டிலாகவும், ஒடுக்கப்பட்டோரின் குரலாகவும் விளங்கும் தமிழ்நாட்டில், இடஒதுக்கீட்டுப் போராட்டத்தின் பேராசான்களாக விளங்கிய தலைவர்களின் பெயர்களை அதிகாரப்பூர்வ அரசு ஆவணங்களில் இருந்து மறைப்பது வரலாற்றுத் துரோகம்.

**சமூக நீதித் தலைவர்களை அவமதிக்கும் த.வெ.க. அரசு!**

திராவிட மாடல் ஆட்சியில் இருந்த நீதிக்கட்சி மற்றும் சமூக நீதித் தலைவர்களின் பங்களிப்புகள், தவெக ஆட்சியில் முற்றிலுமாகத் துடைத்தெறியப்பட்டிருப்பது தற்செயல் அல்ல. இது அதிகார வர்க்கத்தின் திட்டமிட்ட சதி வேலை! நிச்சயமாக இது உள்நோக்கம் கொண்ட செயல்பாடாகவே தெரிகிறது. ஒவ்வொரு ஆண்டும் கொள்கை விளக்க குறிப்பை தயாரிக்கும் போது முந்தைய ஆண்டு கொள்கை விளக்க குறிப்பேட்டில் இருந்துதான் எழுதப்படும். அதில் உள்ள அடிப்படை தகவல்களை மாற்ற மாட்டார்கள். புதிதாக அப்டேட் மட்டுமே சேர்க்கப்படும். இந்த முறையை மாற்றியிருப்பதால்தான் உள்நோக்கம் கொண்டது என கருத வேண்டியிருக்கிறது. சமூக நீதியின் வேர்களையே வெட்டத் துணிந்திருக்கிறார்கள்.

தவெகவின் ஐந்து கொள்கைத் தலைவர்களாக பெரியார், அம்பேத்கர், காமராஜர், வேலுநாச்சியார், அஞ்சலை அம்மாள் ஆகியோர் குறிப்பிடப்படுகிறார்கள். பெரியார், அம்பேத்கர் ஆகியோருக்கு முதல்வர் விஜய் கொடுக்கும் மரியாதை இவ்வளவுதானா? மேடையில் முழங்க பெரியாரும் அம்பேத்கரும் வேண்டும். ஆனால், அவர்களின் இடஒதுக்கீட்டு தியாகம் மட்டும் வேண்டாமா? பெரியாரையும் அம்பேத்கரையும் கட்சிக்கு வெறும் பிராண்ட் அம்பாசிடர்களாக மட்டுமே பயன்படுத்துகிறீர்களா? உங்களின் இரட்டை வேடம், ஆட்சிக்கு வந்த பிறகு கிழிந்து தொங்குகிறது. ’கொள்கைத் தலைவர்களின் கொள்கைதான் எங்கள் மூச்சு. சமத்துவமே எங்கள் பாதை. பிறப்பொக்கும் எல்லோருக்கும்’ என்றெல்லாம் மேடைகளில் முழங்கியது வெற்று முழக்கமா? வாக்கு வங்கிக்கு ஒரு முகம் கொள்கைக்கு ஒரு முகமா?

**சட்டமன்றத்தை சினிமா தியேட்டராக்குகிறார்கள்!**

சட்டமன்றத்தில் சினிமா பாட்டு பாடத் தெரிந்த அமைச்சர் சம்பத்குமாருக்கு கொள்கை விளக்க குறிப்பில் தலைவர்கள் பெயரை நீக்கப்பட்டதை எல்லாம் பார்க்க நேரமில்லையா? கோலிவுட் உலகத்தை விட்டு அவர் இன்னும் வரவில்லை. தியேட்டரை விட்டு சட்டமன்றத்திற்கு வந்திருக்கிறோம் என்பதுகூட தெரியாமல் இருக்கிறார் மந்திரி.

பிரதமர் நேருவின் ஆட்சியில் கொண்டு வரப்பட்ட முதலாவது அரசியலமைப்புச் சட்டத் திருத்தமும், அதற்குப் பின்னால் இருந்த பெரியார், அம்பேத்கரின் சமரசமற்ற சமூக நீதிப் போராட்டங்களும்தான் இன்று தமிழ்நாட்டில் பிற்படுத்தப்பட்டோர் அனுபவிக்கும் 69 % இடஒதுக்கீட்டின் அடித்தளம். அந்த வரலாற்றையே கிழித்தெறிய முற்படுகிறது தவெக அரசு. நேரு பெயரை நீக்கியிருக்கிறார்களே... காங்கிரஸ் கட்சிக்கு மானம், ரோஷம், சொரனை இல்லையா? ’விஜய் போற்றி’ பாடும் பஜனை மடமாகிவிட்ட சத்தியமூர்த்தி பவனை விஜய்பவன் என மாற்றிக் கொள்ளுங்கள். கதர் கிழிஞ்சா தைக்க முடியாது காங்கிரஸ்காரனை திருத்த முடியாது! காங்கிரஸுடன் கூட்டணி வைத்துக் கொண்டே பாஜகவின் நிழல் ஆட்சியை நடத்தி கொண்டிருக்கிறது விஜய் அரசு.

**தலைவர்கள் பெயர் இடம்பெற வேண்டும்!**

பெரியார், அம்பேத்கர், ஜவகர்லால் நேரு ஆகியோரின் பெயர்களை மீண்டும் சேர்த்து திருத்தப்பட்ட கொள்கை விளக்கக் குறிப்பேட்டை உடனடியாக வெளியிட வேண்டும் என வலியுறுத்துகிறோம்.

இவ்வாறு இ.பரந்தாமன் விடுத்துள்ள அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார்.

---

### நீலகிரி மாவட்டத்தில்

# கழக துணைப் பொதுச் செயலாளர் ஆ.இராசா பங்கேற்கும் நிகழ்ச்சிகள்!

## மாவட்டப் பொறுப்பாளர் கே.எம்.ராஜூ எம்.எல்.ஏ. அறிவிப்பு!

உதகை, ஆக. 31-

கழக துணைப் பொதுச் செயலாளர் ஆ.இராசா எம்.பி. நிகழ்ச்சிகளை மாவட்ட கழக பொறுப்பாளர் கே.எம்.ராஜூ எம்.எல்.ஏ. அறிவித்துள்ளார்.

அது வருமாறு:-

**31-8-2026**

காலை 11.30 மணி:- கோத்தகிரியில், மாவட்ட கழக அவை தலைவர் கே.போஜன் அவர்களின் சகோதரி திருமதி.லட்சுமியம்மாள் அவர்கள் எய்தியதை தொடர்ந்து அவரது இல்லம் சென்று விசாரித்து குடும்பத்தினருக்கு ஆறுதல் தெரிவித்தல்.

பகல் 12.30 மணி:- குன்னூரில், கழக உயர்நிலை செயல்திட்டக்குழு உறுப்பினர் பா.மு.முபாரக் அவர்களின் அண்ணன் மகன் அக்பர்அலி அவர்கள் இயற்கை எய்தியதை தொடர்ந்து அவரது இல்லம் சென்று விசாரித்து குடும்பத்தினருக்கு ஆறுதல் தெரிவித்தல்.

மதியம் 3 மணி:- உதகை கிழக்கு நகர கழகம் சார்பில் முள்ளிக்கொரை ஆதரவற்ற முதியோர் இல்லத்தில் நலத்திட்ட உதவிகள் வழங்குதல்.

மாலை 3.30 மணி:- உதகை மேற்கு நகர கழகம் சார்பில் நலத்திட்ட உதவிகள் வழங்குதல். இடம்:- பிரீத்தி கிளாசிக் டவர்ஸ், உதகை.

**நாள்:1-9-2026**

காலை 11.30 மணி:- மேல் கூடலூர் கோக்கால் பகுதயில் இயற்கை எய்திய முன்னாள் மாவட்ட பிரதிநிதி செபாஸ்டின் அவர்கள் இறப்பு குறித்து விசாரித்தல்.

பகல் 12 மணி:- கூடலூர், ஓவேலி லாரஸ்டன் எண்-4 பகுதியில் புலி தாக்கி உயிரிழந்த தொழிலாளிகள் பாலகிருஷ்ணன் மற்றும் ரவிசந்திரன் ஆகியோரது குடும்பத்தினரை சந்தித்து ஆறுதல் தெரிவித்தல்.

மதியம் 1 மணி:- கூடலூர் சளிவயல் பகுதியில் இயற்கை எய்திய கழக மூத்த முன்னோடி வடிவேல் அவர்கள் இறப்பு குறித்து விசாரித்தல்.

மதியம் 3 மணி:- மாவட்ட பிரதிநிதிக.கணபதி அவர்கள் இல்லம் சென்று மணமக்களை வாழ்த்துதல்.

மதியம் 3.30 மணி:- எருமாடு பகுதியில் இயற்கை எய்திய கழக மூத்த முன்னோடி ராஜமாணிக்கம் அவர்கள் குடும்பத்தினருக்கு ஆறுதல் தெரிவித்தல்.

மாலை 4 மணி:- கொளப்பள்ளியில் பந்தலூர் மேற்கு ஒன்றிய கழக செயலாளர் சிவானந்தராஜா அவர்களின் தகப்பனார் இயற்கை எய்தியதை விசாரித்து, குடும்பத்தினருக்கு ஆறுதல் தெரிவித்தல்.

மாலை 4.15 மணி:- வட்டக்கொல்லி மற்றும் டான்டீ-4 பகுதிகளில் யானை தாக்கி உயிரிழந்த செம்பன், தியாகராஜன் ஆகியோரது குடும்பத்தினருக்கு ஆறுதல் தெரிவித்தல். இடம்:- கொளப்பள்ளி

மாலை 4 மணி:- உப்பட்டி நகரமன்ற உறுப்பினர் திரு.நாகராஜ் அவர்கள் இல்லம்.

மாலை 4.30 மணி:- அத்திமாநகர் பகுதியில் தனுஷ் என்பவர் நீரில் அடித்து செல்லப்பட்டதை தொடர்ந்து அவரது இல்லம் சென்று குடும்பத்தினருக்கு ஆறுதல் தெரிவித்தல்.

மாலை 5 மணி:- தேவாலா டான்டீ-3வது ரேஞ்சு பகுதியில் யானை தாக்கி உயிரிழந்த பாலசுப்ரமணியம் அவர்கள் இல்லம் சென்று குடும்பத்தினருக்கு ஆறுதல் தெரிவித்தல்.

மாலை 5.30 மணி:- பாக்கனா பகுதியில் மாவட்ட சிறுபான்மை பிரிவு அமைப்பாளர் அன்வர்அப்துல்லா அவர்களின் தகப்பனார் இயற்கை எய்தியதை தொடர்ந்து அவரது இல்லம் சென்று விசாரித்து குடும்பத்தினருக்கு ஆறுதல் தெரிவித்தல்.

மாலை 6 மணி:- தேவர்சோலை காரக்குன்னு பகுதியில் யானை தாக்கி உயிரிழந்த ரவி, நிங்கராஜ் ஆகியோரது குடும்பத்தினரை சந்தித்து ஆறுதல் தெரிவித்தல்.

மேற்கண்ட நிகழ்ச்சிகளில் கழக துணை பொதுச் செயலாளர் - நீலகிரி நாடாளுமன்ற உறுப்பினர் ஆ.இராசா அவர்கள் கலந்து கொண்டு சிறப்பிப்பார்கள் என்பதனை கழக நிர்வாகிகள், பொதுமக்களுக்கு தெரிவித்துக்கொள்கிறேன்.

இவ்வாறு அவர் அறிக்கையில் தெரிவித்துள்ளார்.



திருவள்ளூர் கிழக்கு மாவட்டம் மீஞ்சூர் வடக்கு ஒன்றிய அவைத்தலைவர் ஆர். கருணாகரன் தாயார் புஷ்பா அவர்கள் இயற்கை எய்தினார் தகவல் அறிந்த மாவட்ட கழகச் செயலாளர் வல்லூர் எம்.எஸ்.கே.ரமேஷ்ராஜ் நேரில் சென்று மலர்மாலை அணிவித்து அஞ்சலி செலுத்தி குடும்பத்தினருக்கு ஆறுதல் கூறினார். உடன் ஒன்றிய கழக பொறுப்பாளர் மு. முரளிதரன், ஒன்றிய நிர்வாகிகள் ஆறுமுகம் ராஜேந்திரன் மற்றும் கிளைக் கழக செயலாளர்கள் அசோகன், வி.எல்.சி.ரவி மணிகண்டன் நிர்வாகிகள் உள்ளனர்.

---

# மதுரை வடக்கு மாவட்ட தி.மு.க. ஆலோசனைக் கூட்டம்!

## வடக்கு மாவட்ட தி.மு.க.வினருக்கு மாவட்டச் செயலாளர் – முன்னாள் அமைச்சர் பி.மூர்த்தி வேண்டுகோள்!

மதுரை, ஆக.31–

தலைமை கழக அறிவிப்பின்படி கட்சி நிர்வாகிகள் தேர்தலை நடத்துவதற்கான ஆயத்தக் கூட்டம் தமிழகத்திலேயே முதலாவதாக மதுரை வடக்கு மாவட்ட தி.மு.க. சார்பில் நடைபெற்றது. கூட்டத்தில் மாவட்ட செயலாளர் முன்னாள் அமைச்சர் பி.மூர்த்தி தலைமை வகித்து தலைமைக் கழக உத்தரவுப்படி தேர்தல் பணியை மேற்கொள்ள வேண்டும் என அறிவுரை வழங்கினார்

கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் ஆணைக்கிணங்க கழக தலைமைச் செயற்குழு கூட்ட முடிவின்படி கட்சியில் அமைப்பு ரீதியாக 110 மாவட்டங்களாக பிரித்து அறிவிப்பு வெளியிடப்பட்டது. இதன்படி மதுரை மாவட்டத்தில் தலா 2 சட்டப்பேரவை தொகுதிகள் இடம் பெறும் வகையில் 5 மாவட்டங்களாக பிரிக்கப்பட்டுள்ளன. இம்மாவட்டங்களில் கட்சியின் மறு சீரமைப்பு குழு அளித்த பரிந்துரைப்படி நகர், ஒன்றிய, பேரூராட்சி , வார்டு, பகுதி என கிளை அமைப்புகளை பூகோள ரீதியாக பிரித்து 15 நாட்களுக்குள் விபரங்களை அளிக்க வேண்டும் என கட்சி தலைமை நேற்றுதான் உத்தரவிட்டது. கட்சி தலைமையினால் அனுப்பப்படும் நிர்வாகி கள் முன்னிலையில் இப் பணிகளை நிறைவேற்ற வேண்டும் எனவும் தெரிவிக்கப்பட்டது.

இதையடுத்து மதுரை வடக்கு மாவட்ட தி.மு.க. சார்பில் நிர்வாகிகள் ஆலோசனைக் கூட்டம் திருப்பாலையில் மாவட்ட செயலாளரும், முன்னாள் அமைச்சருமான பி.மூர்த்தி தலைமையில் நடந்தது. கூட்டத்திற்கு முன்னாள் சட்டமன்ற உறுப்பினர்கள் ஆ.வெங்கடேசன், தமிழரசன், மாவட்ட பொருளாளர் சோமசுந்தர பாண்டியன், தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள் கரு தியாகராஜன், தனச்செல்வம், சேகர், மாநில அணி நிர்வாகிகள் ஜி.பி.ராஜா, கணேசன், வழக்கறிஞர் கலாநிதி, கலை கார்த்திகேயன் உள்ளிட்டோர் முன்னிலை வகித்தனர்

கூட்டத்தில் பேசிய மாவட்ட செயலாளர், முன்னாள் அமைச்சர் பி.மூர்த்தி கழகத் தலைவரின் உத்தரவுப்படி நிர்வாகிகள் தேர்தல் நடத்தப்பட வேண்டும். நிர்வாகிகள் ஒருங்கிணைந்து செயல்பட்டு கட்சி தலைமை குறிப்பிட்டபடி வாக்காளர்களின் எண்ணிக்கைக்கு ஏற்ப பகுதிகளை பிரிக்க வேண்டும். அது தொடர்ச்சியான பகுதிகளாக இருக்க வேண்டும். தேர்தல் மூலமே கட்சி நிர்வாகிகள் தேர்ந்தெடுக்கப்பட உள்ளதால், உண்மையான களப்பணியாளர்கள்தான் பொறுப்புக்கு வர முடியும். பதவி வேண்டும் என விரும்புபவர்கள் கட்சி தொண்டர்கள், விசுவாசிகள், கீழ்மட்ட நிர்வாகிகளின் ஆதரவை பெறும் வகையில் திறம்பட பணியாற்றி வெற்றி பெறும் வழியை காண வேண்டும். தமிழகத்திலேயே முதல் கூட்டத்தை நாம்தான் இந்த ஆலோசனை கூட்டத்தை நடத்தியுள்ளோம். கட்சி தலைமையின் உத்தரவை செயல்படுத்துவதில் மதுரை வடக்கு மாவட்டம் எப்போதும் முதன்மையாக இருக்கும் என்பதை இந்த தேர்தல் பணியிலும் காட்ட வேண்டும். அனைவருக்கும் வழிகாட்டியாக இருந்து, கட்சி தலைமையின் உத்தரவை 100 சதவீதம் சரியாக நிறைவேற்றித்தர வேண்டும். இதற்கு நிர்வாகிகள் முழு ஒத்துழைப்பை அளிக்க வேண்டும்.

விரைவில் கட்சி தலைமை அனுப்பும் நிர்வாகி தலைமையில் அடுத்த கூட்டம் நடக்கும். அப்போது பகுதிகளை பிரிக்கப்பட்டதற்கான பட்டியலை ஒப்படைக்க தயாராக இருக்க வேண்டும் என்றார்

மேலும் இக்கூட்டத்தில் திரளான கழக நிர்வாகிகள் மற்றும் பொறுப்பாளர்கள் பங்கேற்றனர்.

---

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### காதர்பாட்சா (எ) வெள்ளைச்சாமி
### ஆகஸ்ட் 31 (2012)



தென்பாண்டிச் சீமையில் கழகத்தை வளர்த்த மூத்த முன்னோடிகளில் ஒருவர்.

தமிழக சட்டப்பேரவை உறுப்பினராக இருமுறை தேர்ந்தெடுக்கப்பட்டவர்.

கமுதி ஊராட்சி ஒன்றியப் பெருந்தலைவராக மூன்று முறை தேர்ந்தெடுக்கப்பட்டு சிறப்பாகப் பணியாற்றியவர்.

கமுதி ஒன்றியக் கழகப் பொறுப்பாளராகவும், கழகத்தின் சொத்து பாதுகாப்புக்குழு உறுப்பினராகவும் பணியாற்றியவர்.

கழகம் அறிவித்த பல்வேறு அறப்போராட்டங்களில் பங்கேற்று சிறை சென்றவர். ‘மிசா’வில் ஓராண்டு காலம் சிறைத் தண்டனை அனுபவித்தவர்.

“அனைவரிடமும் அன்பு காட்டி, அயராது உழைத்து கழகத்தை வளர்த்தவர்” என தலைவர் கலைஞர் அவர்களால் புகழ்ந்துரைக்கப்பட்டவர்.

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**